www.Padasalai.Net www.CBSEtips.in

# FMK முதல் இடைப் பருவத் தேர்வு - ஆகஸ்ட் 2022

வகுப்பு - 10 தமிழ்

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க: 15×1=15

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா
2. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் குறிப்பன
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
3. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி
அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
4. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் - இத்தொடரில் இடம்பெற்ற தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் முறையே
அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்
5. தென்னன் என்று குறிப்பிடப்பட்ட மன்னன்
அ) பாண்டியன் ஆ) சேரன் இ) சோழன் ஈ) பல்லவன்
6. 'உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்' இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள்
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
7. பெரியமீசை சிரித்தார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை யாது?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
8. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
9. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணம்
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
10. காசிக்காண்டம் என்பது
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
11. விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழை பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே எண்தொகையே! நற்கணக்கே
மண்ணுஞ்சிலம்பே! மணிமேகலை வடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

12. இப்பாடல் இடம்பெற்ற கவிதைத் தொகுப்பின் பெயர் என்ன?
அ) பாஞ்சாலி சபதம் ஆ) மலைக்கள்ளன் இ) கனிச்சாறு ஈ) என் கதை
13. மகளே என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) உம்மைத்தொகை ஆ) பெயரெச்சத்தொடர் இ) விளித்தொடர் ஈ) எண்ணும்மை



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



14. நற்கணக்கே - பிரித்து எழுதுக.
அ) நற்+கணக்கே ஆ) நல்+கணக்கே இ) நல்க்+கணக்கே ஈ) நல்ல+கணக்கே

15. எதுகை நயத்தைத் தேர்ந்தெடு:
அ) தென்னன் - இன்னறு ஆ) தென்னன் - மகளே
இ) மன்னும் - சிலம்பே ஈ) முடி - மணி

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்: 5×2=10


16. வசன கவிதை - குறிப்பு வரைக.
17. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
18. வேங்கை என்பதைத் தொடர் மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
19. 'பல்லார்' எனத் தொடங்கும் குறளை அடிமாறாமல் எழுதுக.
20. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக:
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ.
21. கலைச்சொல் தருக: VOWEL, HOMOGRAPH
22. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:
அ) மலை - மாலை ஆ) விடு - வீடு

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: 4×3=12

23. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
24. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
25. தமிழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.
26. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
27. அடிபிறழாமல் எழுதவும்:
'அன்னை மொழியே' எனத் தொடங்கும் பாடல். (அல்லது)
'சிறுதாம்பு' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்.
28. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள் - இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு எழுதுக.

ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி: 1×5=5

29. அ) உணவு விடுதியில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)
ஆ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:



விரிவான விடையளிக்கவும்: 1×8=8

30. சான்றோர் வளர்த்த தமிழ் - கட்டுரை எழுதுக. (அல்லது)
அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593